

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் விக்கிரமசிங்கபுரம் மூன்று விளக்கு திடலில் வி.கே.புரம் நகரச் செயலாளர் கி.கணேசன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன் பங்கேற்று எழுச்சி உரையாற்றினார். உடன் எழுத்தாளர் சூர்யா சேவியர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், பிரபாகரபாண்டியன், அம்பை கிழக்கு ஒன்றிய செயலாளர் பரணி சேகர், மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ஜெகன், மாநில சுற்றுச்சூழல் அணி தலைவர் பூங்கோதை ஆலடி அருணா, மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்ட துணை செயலாளர்கள் தமயந்தி, தமிழ்ச்செல்வன்,மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் எஸ்.பி.எஸ். பிரபாகரன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



திண்டுக்கல் கிழக்கு மாவட்ட மாணவரணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நான் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் ஐ. பெரியசாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ. செந்தில்குமார் மாநில செய்தி தொடர்பு செயலாளர் தமிழன் பிரசன்னா கிழக்கு மாவட்ட மாணவரணி செயலாளர் அஸ்வின் பிரபாகரன் ஆகியோர் உள்ளனர்.

### துணை முதல்வர் பிறந்த நாள் விழா: சு.சுப்பிரமணியன் ஏற்பாடு! வி.கே.முருகன் தலைமை!

# நெல்லை மேற்கு மாநகரில் 1048 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. – டி.எம்.என்.தீபக் பங்கேற்பு!

*நெல்லை. ஜன.28 -* நெல்லை மேற்கு மாநகர தி.மு.க. நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்தநாள் முன்னிட்டு மாபெரும் பொதுக் கூட்டம் மற்றும் 1048 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு 26.01.2026 திங்கட்கிழமை மாலை 5 மணி அளவில் நெல்லை டவுன் குளப்பிறைத் தெருவில் மாவட்ட அவைத் தலைவர் வி. கே.முருகன் தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பேச்சி பாண்டியன்,ஏ. எல்.எஸ். லெட்சுமணன், மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன் பகுதி பொறுப்பாளர்கள் நமச்சிவாயம் கோபி,பூ. சுப்பிரமணியன், சங்கர், டாக்டர்.சங்கர் மாமன்ற உறுப்பினர் உலகநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.கழக மாற்றுத் திறனாளிகள் அணி செயலாளர் டி. எம்.என்.தீபக் ஆகியோர் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினர்.

நிகழ்வில் முன்னாள் அமைச்சர் மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு தலைவர் டி.பி.எம்.மைதீன் கான், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் பாளை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் ச.முத்துச் செல்வி, மாநில சட்ட திட்ட குழு உறுப்பினர் சுப.சீதாராமன், மாநில நெசவாளர் அணி செயலாளர்சொ.பெருமாள்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் என்.மாலை ராஜா, மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாநில சட்டத்துறை துணை செயலாளர் ராஜா முகம்மது,மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் ராஜவர்மன், பொதுக்குழு உறுப்பினர்கள் நடராஜன், ராஜேஸ்வரி கண்ணன் உள்பட மாவட்ட நிர்வாகிகள், மாநகர நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர், கழக செயலாளர்கள், சார்பு அணி அமைப்பாளர்கள், நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மூத்த முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் 27 வது வட்ட செயலாளர் கேபிள் குமரேசன் நன்றி உரையாற்றினார்.

கூட்ட ஏற்பாட்டை நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் செய்திருந்தார்.

# தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287)பணிமனை நிர்வாகிகள் தேர்தல் 31.01.2026 அன்று நடைபெறுவதாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. ஏற்கெனவே நடைபெற்று வருகின்ற சமரசப் பேச்சுவார்த்தை தொடர்வதால், ஆணையாளர் வழக்கறிஞர் திரு. அ.சரவணன் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தேர்தல் நடைபெறும் நாள் ஒத்தி வைக்கப்படுகிறது.

சமரசத் தீர்வு எட்டவில்லை யென்றால் 15.02.2026 அன்று அச்சங்கத்தின் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **கலைஞரகம்** | **மு.சண்முகம் Ex.MP** |
| சென்னை - 17 | பொதுச் செயலாளர் |
| நாள்- 27.01.2026 | தொ.மு.ச. பேரவை |

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# எம்.எஸ்.கே. சத்தியேந்திரன்

### சனவரி 29 (1986)



**இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியவர்.**

**இராமநாதபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் – பின்னர், இராமநாதபுரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் களம் கண்டு சிறை சென்ற தீரர், நல்ல பண்பாளர், இனியவர், எளியவர், செயல் வீரர்.**

**“சேதுபதிச் சீமையின் செந்தாமரை மலரே! உறுதி குலையாத உடன்பிறப்பு என்ற பெருமைக்குரிய உனது கால்மலர்களில் எனது கண்ணீரைப் பன்னீராய்க் கொட்டி உனக்கு இறுதி வணக்கம் செலுத்துகிறேன். நிழற்படமாகி விட்டாய் எனினும், எங்கள் நெஞ்சில் நிலையான இடம் பெற்றுவிட்டாய்” என தலைவர் கலைஞரால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

## தலைமைக் கழகம்

## தி.மு.க.

### ஆத்தூர் வட்டார ஆசிரியர்கள் 150 பேர்

# உறுதி அளிக்கப்பட்ட ஓய்வு ஊதிய திட்டத்தை அறிவித்த முதல்வருக்கு நன்றி!

## அமைச்சர் ஐ.பெரியசாமியைச் சந்தித்து தெரிவித்தனர்!



*திண்டுக்கல், ஜன. 29 -* திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் வட்டார செயலாளர் லு. டியோனி, வட்டார தலைவர் ஈஸ்வரி, வட்டார பொருளாளர் அன்பரசு ,ஆகியோர் தலைமையில் 150 க்கு மேற்பட்ட ஆசிரியை, ஆசிரியர்கள் உறுதி அளிக்கப்பட்ட ஓய்வு ஊதிய திட்டத்தை அறிவித்த தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் , துணை முதலமைச்சர் உதய நிதி ஸ்டாலின் உறுதுணையாக இருந்த ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ பெரியசாமி ஆகியோருக்கு நன்றி தெரிவித்து அவருக்கு சால்வை அணிவித்து நன்றி தெரிவித்தனர்.

ஆசிரியர் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் இன்று வரை ஆசிரியர் சமுதாயத்திற்கு உறுதுணையாக இருப்பது தி.மு.க. அரசு கடந்த 10 வருடங்களுக்கு முன்பு அ.தி.மு.க. ஆட்சியில் போது ஆசிரியர் சமுதாய மிகவும் பாதிப்படைந்தது அதன் பின்னர் கடந்த நான்காண்டுகளாக அவர்கள் நிம்மதியாக பணி செய்யும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்னை பொருத்தவரை தமிழகத்தில் உள்ள ஆசிரியர்கள் அவர்கள்அவர்கள் விரும்பும் இடத்தில் பணிபுரிய நான் உறுதுணையாக வந்துள்ளேன் ஒரு மாணவனை உயர்ந்த மனிதனாக ஆக்குவது ஆசிரியர் சமுதாயம். இதை கருத்தில் கொண்டு தான் முத்தமிழறிஞர் கலைஞர் ஆசிரியர் சமுதாயத்திற்கு ஏதாவது ஒரு இடர்பாடு என்றால் முதல் ஆளாக குரல் கொடுத்தார் அவர் வழியில் இன்று தமிழகத்தை ஆளும் திராவிட மாடல் ஆட்சி நாயகர் கழக தலைவர் மு.க. ஸ்டாலின் இப்போது உங்களுக்கு உறுதி அளிக்கப்பட்ட ஓய்வு ஊதிய திட்டத்தை அறிவித்துள்ளார் இதன் மூலம் உங்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது என்றார் அப்போது பேசிய ஆசிரியர்கள் நிகழ்ச்சியின் போது ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார் நத்தம் முருகேசன் ,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர்கள் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், கணேசன் மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, பேரூராட்சி மன்ற தலைவர் அய்யம்பாளையம் ரேகா அய்யப்பன், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால் என்ற மணி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி அருண் ஜெகநாதன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், முன்னால் ஒன்றிய குழு உறுப்பினர்கள் செல்வி காங்கேயன், சுமதி கணேசன், நாக லட்சுமி ரமேஷ், காளீஸ்வரி மலைச்சாமி, திமுக நகர சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் என்.நஜீப், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர், நெல்லை சுபாஷ், அய்யம்பாளையம் சுந்தர், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

### ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்ட – தமிழ்நாடு


# கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டமுன் வடிவு - மீண்டும் நிறைவேற்றம்!

## சட்டப்பேரவையில் – விவாதத்திற்குப் பதிலளித்து – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விளக்கம்!

**சென்னை, ஜன. 29 – ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்ட – தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் திருத்தச் சட்டமுன் வடிவு, சட்டப் பேரவையில் ஜன. 24 அன்று மீண்டும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.**

**பேரவையில் இச்சட்ட முன்வடிவு மீதான விவாதத்திற்குப் பதிலளித்த கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், இச்சட்ட முன்வடிவு மீண்டும் நிறைவேற்றப்படு வதற்கான காரணத்தை எடுத்துரைத்தார்.**

சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:



கூட்டுறவுத் துறையின் சார்பில் சில சீர்த்திருத்தங்களை சங்கங்களுடைய பாதுகாப்புக்காக கொண்டுவர வேண்டுமென்று, கொண்டுவரப்பட்ட இந்த அவையின் அனுமதி பெற்ற அந்தச் சட்டத் திருத்தத்தை ஆளுநர் அவர்கள் ஏற்க மறுத்து, திருப்பி அனுப்பியதை மீண்டும் இம்மாமன்றத்தில் நிறைவேற்ற வேண்டுமென்றும், அவர்களுடைய நடவடிக்கைகளைக் கண்டித்தும்,

அதேநேரத்தில் இது முக்கியமான சட்டத் திருத்தம் என்று தங்களுடைய கருத்துகளைச் சொல்லியிருக்கின்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் பிரிவு 88 (1) ஆனது ஒரு கூட்டுறவுச் சங்க நிர்வாகச் சபையானது முறைகேடுகளில் ஈடுபட்டிருக்கும்பட்சத்தில், அதனைக் கலைத்து, அச்சங்க நிர்வாகத்தில் ஒரு செயல் ஆட்சியரைப் பணியமர்த்தம் செய்யவும் வழிவகை செய்கிறது.

மேலும், அத்தகைய சங்கத்தின் நிர்வாகச் சபையினை இரண்டு மாத கால இடைவெளியில் சில சங்க நிர்வாக சபைகள் அவற்றின் கணக்குப் புத்தகங்களை அழித்துவிடும் சூழ்ச்சியைக் கையாளுகின்றன.

எனவே, கலைப்பது தொடர்பான உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்னர் உள்ள இரண்டு மாத கால இடைவெளியில் அத்தகைய சங்க நிர்வாகச் சபையினை இடைநிறுத்தமே செய்து சங்க விவகாரங்களை மேற்பார்வையிட ஓர் இடைக்கால செயல் ஆட்சியரை நியமிப்பது அவசியமாகிறது.

மேலும், அரசின் பங்கு வைப்பு அல்லது கடன் அல்லது நிதியுதவி அல்லது பொறுப்பு நிதி எதுவும் இல்லாத பதிவு பெற்ற சங்கங்களில் அத்தகைய முறைகேடுகள் கண்காணிக்கப்பட்டால், அத்தகைய சங்கங்களின் நிர்வாகச் சபையினைக் கலைப்பது அவசியமாகிறது.

இச்சட்ட முன்வடிவு 10.12.2024 அன்று நிறைவேற்றப்பட்டு, ஆளுநர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அவர் சில தெளிவுரைகளைக் கோரி, அதனைத் திருப்பி அனுப்பினார்.

ஆளுநர் கோரிய தெளிவுரைகளுக்கான பதில் அனைத்தும் உரிய முறையில் அனுப்பப்பட்ட நிலையிலும்,

இச்சட்ட முன்வடிவு 16-6-2025 ஆம் நாளன்று திருப்பி அனுப்பப்பட்ட 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் திருத்தச் சட்ட முன் வடிவினை மீண்டும் நிறைவேற்றும்படி பேரவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதனையடுத்து - பேரவையில் இச்சட்ட முன் வடிவு, குரல் வாக்கெடுப்பின் மூலம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.



தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. வடக்கு மாவட்ட மாணவரணி மற்றும் பெரியகுளம் நகர கழகம் சார்பாக மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் பெரியகுளத்தில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஸ்டீபன் தலைமையில் நடைபெற்றது. நகரச் செயலாளர் முகமது இலியாஸ் வரவேற்புரை ஆற்றினார் சரவணகுமார் எம்.எல்.ஏ., பி.டி.செல்லபாண்டியன். வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டியன் ஆகியோர் முன்னிலை வைத்தனர். வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் சல்மா, தமிழ்நாடு அரசு டெல்லி சிறப்பு பிரதிநிதி. ஏ.கே.எஸ்.விஜயன். பெரியகுளம் தொகுதி பார்வையாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முத்துராமலிங்கம்,போடி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் நேரு பாண்டியன், தலைமைக் கழக பேச்சாளர் நாத்திகம் நாகராஜ், பேச்சாளர் சுருதி,ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள் மற்றும் மாவட்டத் துணைச் செயலாளர் திருகண்ணன். நாகஜோதி அருணாசலம், மாவட்டப் பொருளாளர் சுரேஷ், செயற்குழு உறுப்பினர் முருகேசன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் சுதந்திரம் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் நகரச் செயலாளர்கள் சார்பு அணி நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.